**DEPOSITION OF WITNESS**
**( Chapter XXIII Code of Criminal Procedure )**
**--**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.**

| | | | |
|---|---|---|---|
| வழக்கு எண். | CC. No.198/2024 | அரசுத்தரப்பு சாட்சி | P.W.3 |
| பெயர் | ஆறுமுகம் | கிராமம் | |
| தந்தை / கணவர் பெயர் | பரமசிவம் | வட்டம் | |
| வயது | | மாவட்டம் | |

Solemnly affirmed by Thiru.S.Krishnan, Grade –II Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873. Dated: 09.06.2026

As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1– Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.
Aadhar card of the Witness verified.

எதிரி ஆஜர் இல்லை. எதிரி ஆஜராகாததை மன்னிக்க மனு கொடுக்கப்பட்டு அம்மனு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் புதுக்கோட்டை மாவட்டம் கிழக்கு 4ம் வீதியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 17.02.2023 தேதியில் புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையத்தில் இருந்து நான் வந்து கொண்டிருந்தேன். டீ கடை வாசலில் போலிசார் நின்று கொண்டிருந்தார்கள். அந்த இடத்தில் ஒரு விபத்து நடந்துவிட்டதாகவும் அதற்காக போலிசார் விசாரணை செய்து கொண்டிருப்பதாகவும் அது சம்மந்தமாக நான் சாட்சியாக இருக்குமாறும் என்னிடம் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் நான் பார்வை மகஜர் ஆவணத்தில் கையெழுத்து செய்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வைகஜர் ஆவணத்தில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது ஆகும். அது அ.சா.ஆ.3. அப்போது மணி மாலை சுமார் 4 இருக்கும்.

(சாட்சியானவர் அரசு வழக்கை ஆதரிக்காமல் சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 157 Bharatiya Sakshya Adhiniyam' 2023 சட்டத்தின் படி அரசு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார். அதனால் நீதியின்

பொருட்டு சாட்சியை பகுதியாக குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது.)

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் நடைபெற்று சுமார் 3 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டதால் ஞாபக மறதி காரணமாக தேதியை நான் மாற்றி சொல்கிறேன் என்று சொன்னால் சரிதான்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவ இடத்தில் வைத்து தான் பார்வைமகஜர் ஆவணத்தில் கையெழுத்து போட்டேன். காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட பார்வைமகஜர் ஆவணத்தில் நான் கையெழுத்து செய்து கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இறந்துபோன நபரை எனக்கு முன்பின் பழக்கம் இல்லை. இறந்துபோன நபரின் மகனை எனக்கு பழக்கம். இறந்துபோன நபரின் மகன் எனக்கு வேண்டப்பட்டவர் என்பதால் அவருக்கு அனுசரனையாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Sd/– ஆறுமுகம்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.